**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**OS No.145/2020**

**05.03.2026 வா.சா.1 சுரேஷ் த/பெ. குள்ளப்பன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் 5 மற்றும் 6 தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் சீர்வரிசை சரியாக செய்யவில்லை என்று கேஸ் போட்டுள்ளார். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். நான் கௌதமிக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வந்துள்ளேன். கௌதமி பாகப்பிரிவினை பரிகாரம்கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கௌதமி யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். நான் விவசாயம் செய்து வருகிறேன். கௌதமி தாக்கல் செய்த தாவா சொத்து கீழ்படுர் கிராமத்தில் உள்ளது. எவ்வளவு பாகம் வழக்கில் கேட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. சொத்தின் சர்வே எண்ணும் தெரியாது. நான் அந்த ஊரில்தான் பிறந்தேன். தாவா சொத்து அண்ணாமலையின் பூர்வீக சொத்துஎன்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. அண்ணாமலையின் வயது எனக்கு தெரியாது. அவர் விவசாயம் செய்து வருகிறார். அண்ணாமலைக்கு அந்த ஊரில் 2 ஏக்கர் நிலம் உள்ளது. அண்ணாமலையின் அப்பா பெயர் குப்புசாமி. அண்ணாமலையின் உடன் பிறந்தவர்கள் காசி , பாப்பாத்தி, கம்சலா ஆகியோர் ஆவார். அண்ணாமலையின் அப்பாவுடன் பிறந்தவர் வேணுகோபால். வேணுகோபால் மற்றும் குப்புசாமி ஆகியோருக்கு இடையே நடந்த பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கௌதமிக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. அவரின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. கௌதமிக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் இருக்கிறார்கள். கௌதமி மற்றும் அவர் பிள்ளைகள் சென்னையில் இருக்கிறார்கள். தாவா சொத்து அண்ணாமலையின் பூர்வீக சொத்து என்று எனக்கு எப்படி தெரியும் என்று கேட்டால் என் நிலத்திற்கு அருகில் தான் அவர் நிலம் இருக்கிறது. நான் போகும்போது அவர் என்னிடம் பேசுவார். அண்ணாமலையின் தனிப்பட்ட கிரையங்களை பற்றி எனக்கு தெரியாது. கௌதமி தாவா சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் அவர் அண்ணாமலையுடன் சேர்ந்து விவசாயம் செய்தார். கௌதமி எந்த வகையிலும் தாவா சொதததை அனுபவித்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கௌதமிக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.